மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் நாள் வியாழக்கிழமை

O.S.60/2022

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 - வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமன் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | வெங்கடாஜலம் | கிராமம் | : | கோமல் |
| ஜாதி | : | | தொழில் | : | |
| சமயம் | : | | வயது | : | 64/25 |

முதல் விசாரணை ..

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதாகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் தரப்பில் **கடந்த 02.05.2023 தேதியில் என்னால் தாவா சொத்திற்கு பயிர் காப்பீட்டிற்கு பிரிமீயம் செலுத்தியதற்கான ரசீது - கணினி நகல் பி.சா.ஆ.1 ஆகவும், கடந்த 14.02.2024 தேதியில் முத்தையா நெல் அறுவடை இயந்திரம் மூலம் நெற்பயிர்களை அறுவடை செய்தற்கான ரசீது அசல் பி.சா.ஆ.2 ஆகவும், கடந்த 19.02.2024 தேதியில் கோமல் கிராமத்திலுள்ள தமிழ்நாடு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் என்னால் நெல் விற்பனை செய்தற்கான ரசீது - அசல் பி.சா.ஆ.3 ஆகவும், கடந்த 23.09.2024 தேதியில் பின்னவாசல் வேளாண்மை விரிவாக்க மையத்தில் நான் என் மனைவி, மகள் ஆகியோர்கள் பெயரில் தாவா சொத்தில் பயிர் சாகுபடி செய்வதற்காக விதை நெல் வாங்கியதற்கான ரசீது மற்றும் சான்று - அசல் (தொகுப்பு-5) பி.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்தில் நான் சாகுபடி செய்ததற்கான புகைப்படம் (தொகுப்பு-15) மற்றும் குறுந்தகடு பி.சா.ஆ.5 ஆகவும், தாவா சொத்தில்**

**நான் சாகுபடி செய்ததற்கான வீடியோ குறுந்தகடு பி.சா.ஆ.6 ஆகவும், என் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது பி.சா.ஆ.7 ஆகவும், குறியீடு செய்து ( வாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக பிற்பாடு தயார் செய்யப்பட்டது என்றும், தாவா சொத்திற்குரியது அல்ல என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் பரிசீலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது)**

//இன்று மேற்படியார் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. //

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க முதன்மை விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.04.17 18:09:59 +0530

District Munsif,

Tiruvarur